Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 16 2024

திங்கட்கிழமை செப்டெம்பர் 16, 2024 | ஒளி: 10 கதிர் 051 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE




## தேர்தல் விடுமுறை விபரம்

தேர்தல் வாக்களிப்பதற்கான அரச மற்றும் தனியார் துறையினருக்கான விடுமுறை அளிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, விடுமுறை வழங்கப்படவேண்டிய விபரங்களையும் அறிவித்துள்ளது.

வாக்களிப்பதற்கான விடுமுறையானது நீங்கள் பணியாற்றும் நிறுவனத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் கிலோ மீற்றர் தூரத்தை அடிப்படையாகக் கொண்டது. இரு வழியையும் (போய் வருதல்) சேர்த்து தூரம் கணிக்கப்படும்.

40 KM குறைந்த - அரை நாள்.(1/2Day)
40 - 100 Km - ஒரு நாள். (1 Day)
100-150 KM - ஒன்றரை நாள்.(1 1/2)
150 KM மேல் - இரண்டு நாள் (2 Days)

வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்காத தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஒரு மாத சிறை மற்றும் 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

“பொருளாதார அபாயத்திலிருந்து

# முழுமையாக விடுபடவில்லை”

## ஜூலி கொசெக் தெரிவிப்பு



இலங்கை இதுவரை பயணித்த பாதையில் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. ஆனாலும், நாடு இன்னும் பொருளாதார ஆபத்தில் இருந்து மீளவில்லை என்றும் சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்த வெற்றிகளைப் பாதுகாப்பது முக்கியம் என்றும் குறிப்பிடும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொசெக் (Julie Kozack), அதனை எதிர்வரும் தேர்தலில் இலங்கை மக்கள் தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வரலாற்றில் ஏற்பட்டுள்ள மோசமான நெருக்கடியிலிருந்து இலங்கைக்கு மீள்வதற்கான வாய்ப்பை வழங்க இந்த வேலைத்திட்டத்தின் இலக்குகளை அடைவது மிகவும் முக்கியமானது என்றும் ஜூலி கொசெக் (Julie Kozack) கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கொசெக் (Julie Kozack) கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

“கடந்த ஜூன் 12ஆம் திகதி, எங்களின் நிர்வாகக் குழுவினால் 2024 இலக்கம் IV உறுப்புரையின் கீழ் முன்னெடுக்கப்படும் ஆலோசனை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் (EFF) தொடர்பான வேலைத்திட்டத்தின் இரண்டாவது மதிப்பாய்வை நிறைவு செய்துள்ளது. அதன் மூலம் இலங்கைக்கு சுமார் 336 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி விடுவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அனுர, சஜித் அணியில் இருவர் ரணிலுக்கு ஆதரவு

வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த இருவரும், வேட்பாளர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஒருவரும், சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## இறையாசி

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, நாடளாவிய ரீதியில், ஞாயிற்றுக்கிழமை (15) சுமுகமான முறையில் இடம்பெற்றது. அந்த பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான இறையாசி மற்றும் எழுது கருவி வழங்குகின்ற நிகழ்வு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய சன்னிதானத்தில் வெள்ளிக்கிழமை (13) நடைபெற்றது. ஆலய பிரதம குருக்கள் சிவசிறி மு.கு.சச்சிதானந்த குருக்கள் முன்னிலையில் ஆலய தலைவர் இ.மேகராசா (அதிபர் )தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

– வி.ரி.சகாதேவராஜா



## “பெருந்தோட்ட மக்களை நிச்சயம் மேம்படுத்துவோம்”

எஸ்.கணேசன்

மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை நிச்சயம் மேம்படுத்துவோம். அவர்களுக்குரிய காணி உரிமை நிச்சயம் வழங்கப்படும். மலையக மக்களும் இந்நாட்டில் சம உரிமை பெற்றவர்களாக வாழ முடியும் - என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன்,தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் மலையக மக்களும் பங்குதாரர்களாவார்கள் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளது எனவும் அவர் கூறினார்.

தேசிய மக்கள் சக்தி சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், அனுரகுமார திசாநாயக்கவை ஆதரித்து, நுவரெலியா - தலவாக்கலையில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நல்லடக்கமா? எரிப்பா? நாமே எதிர்த்தோம்

முஸ்லிம் சமூகத்தின் இஸ்லாமியக் கலாசாரம் மற்றும் மத உரிமைக்காக அன்று ஐக்கிய மக்கள் சக்தியே முன்னின்றது. ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதா அல்லது எரிப்பதா என்ற பிரச்சினையின் போது நாம் மட்டுமே எதிர்த்தோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்

## பிரதமராக வரும் காலம் நெருங்குகிறது

ஏ.எச்.ஏ.ஹுஸைன்




இந்த நாட்டில் இனியும் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதம மந்திரியாக வர முடியாது என்ற கருத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கின்ற காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது, அதையும் நாங்கள் இறைவன் உதவியால் எங்கள் அரசியல் சரித்திரத்தில் சாதித்துக் காட்டுவோம். ஆட்சியையும் அந்தஸ்தையும் அடைந்து கொள்வதில் எந்த சிரமமும் இருக்கப் போவதில்லை என வடமேல் மாகாண ஆளுநர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

109 ஆண்டுகளுக்குப் பிறகு

## ஹென்றி பெட்ரிஸுக்கு ஜனாதிபதி மன்னிப்பு



கடந்த 109 வருடங்களுக்கு முன்னர், பிரித்தானிய ஆட்சியாளர்களால் நியாயமற்ற விசாரணையின் பின்னர் கொல்லப்பட்ட கெப்டன் எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸுக்கு மரணத்திற்குப் பின் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 33(ஊ) உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால்

தொடர்ச்சி P2

## “மாற்றங்களுக்காக பலிக்கடாக்களாக்காதீர்”



பொருளாதாரத்தை மீதப்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நிறுத்தப்போவதாகக் கூறும் தேசிய மக்கள் சக்தி, தங்களது அரசியல் மேடைகளுக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “கிழக்கில் தமிழர்கள் அழிந்து போகும் ஆபத்து”

கனகராசா சரவணன்



கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழ் மக்கள் 15 ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாது அழிந்து போகக் கூடிய ஆபத்து இருக்கிறது ஆகவே இவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால், தமிழர் தேசம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்வு எட்டப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழர்களுடைய தலை நகரமான திருகோணமலை இன்று தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்கள் முழுவதும் கபளீகரம் செய்யப்பட்டு,

தொடர்ச்சி P2

## தக்காளிச்சாறு நிறுவன உரிமையாளருக்கு சிறை

வ.சக்தி



தக்காளிப்பழ சாறு கலவையில் உணவு பாதுகாப்பு விதிகளை மீறி மனித சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பென்சோயிக்கமிலம்,

செயற்கை நிறமூட்டி கொண்டு தயாரிக்கப்பட்ட கலவையைப் பாவித்த சிற்றுண்டிச் சாலை உரிமையாளர், விநியோகித்தர் மற்றும் தயாரிப்பு நிறுவன உரிமையாளர் ஆகியோருக்கு எதிராக சுகாதார பரிசோதகரால் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# முழுமையாக விடுபடவில்லை”

வேலைத்திட்டத்தின் செயல்திறன் வலுவாக உள்ளது. மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களின் பிரதிபலன்கள் காட்டப்பட்டுள்ளன. பொருளாதாரம் வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. பணவீக்கம் குறைந்து வருகிறது. அந்நியச் செலாவணிக் கையிருப்பு மற்றும் அரச வருமானம் அதிகரித்து வருகிறது. இருப்பினும், இன்னும் குறிப்பிடத்தக்க அளவு அபாயம் உள்ளது. எனவே, மறுசீரமைப்புகளை தொடர வேண்டியது அவசியமாகும்”

தனியார் கடன் வழங்குநர்கள் தங்கள் கடன் மறுசீரமைப்பு முன்மொழிவு தொடர்பான அறிக்கையைச் சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுவது தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த அவர், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புகளை நிறைவு செய்தல் மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் ஒப்பந்தங்களை எட்டுவது முக்கிய மைல்கற்களாக அமையும் என்றார்.

மேலும், IMF பணிக்குழாமினால் ஒன்றிணைக்கப்பட்ட கட்டமைப்பை மதிப்பாய்வு செய்து, அதன் மதிப்பீட்டை இலங்கை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாகவும், அதற்கு மேலதிகமாக இலங்கை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, IMF பணிக்குழாமினால் இந்த மதிப்பீட்டை இலங்கை பிணைமுறி உரிமையாளர்களின் நிதி ஆலோசகர்களுக்கும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், “இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் எங்களின் பணி அதிலிருந்து முடிவடைகிறது. கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் சர்வதேச நாணய நிதியம் பங்கேற்பதில்லை என்பதை நான் இங்கு வலியுறுத்த வேண்டும். அந்த பேச்சுவார்த்தைகள் கடன் பெற்ற நாட்டிற்கும் அதன் கடன் வழங்குநர்கள் இடையில் நடைபெறுகின்றன. சர்வதேச நாணய நிதியம் கடன் நிலைபேற்றுத்தன்மையின் பொதுவான மதிப்பீட்டை மாத்திரமே செய்கிறது. மேலதிக விபரங்களுக்கு, இலங்கை அதிகாரிகள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையை ஆராயுமாறு பரிந்துரைக்கிறேன்” என்றும் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் கடன் நிலைபேற்றுத்தன்மை மதிப்பீடு (DSA) தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த ஜூலி கொசெக் (Julie Kozack),

“இதற்கான எனது பதில் எனது முந்தைய பதில்களைப் போலவே உள்ளது. முதலில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் பார்வையில், இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்திருப்பதை காணலாம். ஆனால், இலங்கை தனது வரலாற்றில் எதிர்கொண்ட மிக மோசமான நெருக்கடியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு, இந்த வேலைத்திட்டத்தின் மூலம் அடைந்த சாதனைகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்.

மூன்றாவது மீளாய்வுக்கான காலம் குறித்து தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படும். எனவே, ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர், புதிய அரசாங்கம் அல்லது இலங்கை மக்கள் செய்யும் தெரிவின் அடிப்படையில், வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களைத் தொடர எதிர்பார்க்கிறோம். அதன்படி செயல்பட நாங்கள் தயாராக இருக்கிறோம்” என்றார்.

# பிரதமராக வரும்...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவை ஆதரித்து ஏறாவூரில் சனிக்கிழமை (21) இடம்பெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

தமிழ்-முஸ்லிம் சிங்கள சமூகங்களை இளைஞர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான ஆதரவாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் நஸீர் அஹமட், இந்த நாட்டில் புரையோடிப் போய் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த நாட்டுக்குச் சிறுபான்மைச் சமூகத்திலிருந்து பிரதமர் ஒருவர் கட்டாயம் தேவை. அரசியல் அந்தஸ்தை அடைந்து கொள்வதற்கும் ஆட்சியதிகாரங்களில் அமர்ந்து கொள்வதற்கும் சிறுபான்மைச் சமூகங்களாகிய நாங்கள் பயப்பட வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. இந்த விடயங்களை வெளியில் சொல்வதற்கும் அஞ்சத் தேவையில்i. ஏனென்றால் இந்த நாட்டில் உள்ள அனைத்துக் குடிமக்களுக்கும் ஒரே குடியியல் அந்தஸ்துதான் உள்ளது. மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்கள் கொல்லப்பட முன்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கி விட்டுத்தான் மறைந்தார்கள். கடைசியாக அந்தக் கட்சி சார்பாகத்தான் வேட்பு மனுத் தாக்கல் செய்தாரே தவிர ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அல்ல. அவர் தேசிய ஐக்கியத்தை உணர்ந்தவராக எதிர்வு கூறலுடன் இதனைச் செய்தார்.

இந்த யதார்த்தத்தை சகவாழ்வை விரும்பும் இந்த நாட்டு மக்கள் கட்டாயம் புரிந்து கொண்டாக வேண்டும்

அப்படிப்பட்ட ஒரு தூரநோக்கு சிந்தனையாளரை வைத்து வியாபாரம் செய்வதைத்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் செய்து கொண்டிருக்கின்றார். நாங்கள் சமூகத்துக்காகக் குரல் கொடுத்துக் கொண்டு வருகின்றோம்.

இந்த நாட்டில் முஸ்லிம் என்ற அடையாளத்தோடு நடமாட முடியாத அச்சம் பீதி நிறைந்திருந்த காலத்தில் மத்ரசாக்கள் மூடப்பட்ட காலத்தில் தொழுகைக்காகப் பள்ளிவாசல்களுக்குச் செல்ல முடியாத காலகட்டத்தில், புனித அல்குர்-ஆன் பிரதிகளை வீட்டில் வைத்திருக்க முடியாது ஆற்றிலோ குளத்திலோ குப்பைத் தொட்டியிலோ கிணற்றிலோ போடப்பட்ட அச்சமும் பீதியும் அராஜகமும் தலைவிரித்தாடிய காலகட்டத்தில்தான் ரணில் விக்ரமசிங்க இந்த சாட்டைப் பொறுப்பெடுத்தார்.

அன்றிலிருந்து இன்றுவரை இந்த நாட்டில் மேற்சொன்ன நிலைமைகள் எதுவும் இல்லை. சிறுபான்மை பெரும்பான்மை எனும் அச்சம் இல்லை. சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டு மக்கள் மூவேளையும் உணவு உண்ண முடிகிறது. மாணவர்கள் கல்வியைத் தொடர்கிறார்கள். இந்த நிலை இனியும் தொடர வேண்டும். நாடு இனவாதம், மதவாதம் இன்றி கண்குளிர்ச்சி காணும் வகையில் அபிவிருத்தி அடைய வேண்டும் அதற்கு இன்னும் ஐந்தாண்டுகளுக்கு ரணில் விக்ரமசிங்ஹவின் ஆட்சி நீடிக்க மக்களாணை வேண்டும்” என்றார்.

# ஹென்றி பெட்ரிஸுக்கு ஜனாதிபதி மன்னிப்பு

இந்த ஜனாதிபதி மன்னிப்பு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 12ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அப்போதைய இலங்கை ஆளுநரான ரொபர்ட் சாமஸ் இனால், 1915ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி, வெளியிடப்பட்ட பிரகடனத்தின் மூலம் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தின் நியாயமற்ற விசாரணைக்குப் பிறகு, 1915ஆம் ஆண்டு ஜூலை 07ஆம் திகதி, கெப்டன் எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸூக்கு சட்டவிரோதமாக மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவிப்பில் கெப்டன் எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸுக்கு மரணத்திற்குப் பின்னர் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1888 ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி காலியில் பிறந்த ஹென்றி பெட்ரிஸ், பிரித்தானிய ஆட்சியின் போது இலங்கையில் வாழ்ந்த ஒரு முக்கிய சமூக ஆர்வலராகவும், அதேபோல, இலங்கை பாதுகாப்புப் படை மற்றும் கொழும்பு நகர பாதுகாப்பு படையில் பணியாற்றியதோடு இராணுவ கெப்டனாகவும் இருந்தார்.

பிரித்தானிய அதிகாரிகளால் 1915இல் இனக் கலவரத்தைத் தூண்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கொல்லப்பட்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவுஅறிவித்துள்ளது.

# “பெருந்தோட்ட மக்களை நிச்சயம் மேம்படுத்துவோம்”

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

“மலையகத்திலிருந்து பலர் பாராளுமன்றம் சென்றுள்ளனர், அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் மக்கள் படும் துன்பம் மாறவில்லை. எனவே, இதே வலிகளுடன் அவர்களுடன் பயணிப்பதா இல்லையேல் மாற்றம் வேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். புதிய அரசியலே வேண்டும் என மக்கள் சொல்கின்றனர். அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் செப்டம்பர் 21 ஆம் திகதி நுவரெலியா மாவட்ட மக்களும் பங்கேற்கவுள்ளனர்.

மக்களுக்குப் போலி உறுதிமொழிகளை வழங்கி வாக்கு வேட்டை நடத்தும் அரசியலே முன்னெடுக்கப்பட்டுவந்தது. தேர்தல் காலத்தில் உணவு, மதுபானம் உள்ளிட்டவை வழங்கப்பட்டு வாக்குகள் பெறப்பட்டன. தோட்டப் பகுதிகளில் மக்களை அச்சுறுத்தி வாக்குகளைப் பெற்றனர். இவ்வாறான நிலைமைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் அல்லவா? செப்டம்பர் 21 ஆம் திகதி அதனைச் செய்வோம்.

வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மக்கள் தேசிய மக்கள் சக்தி பின்னால் அணிதிரண்டுள்ளனர். மலையக மக்களும் எம்மை வெற்றிபெறவைப்பதற்கு ஒன்றிணைய வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் ஹங்குராங்கெத்த, வலப்பனையில் வெற்றி உறுதி. ஏனைய இரு தொகுதிகளையும் வெற்றிபெறுவதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. ரணில் விக்ரமசிங்க உட்பட ஏனைய வேட்பாளர்கள் எப்படிதான் உறுதிமொழிகள் வழங்கினாலும் எமது வெற்றியைத் திசை திருப்ப முடியாது. ஏமாற்று அரசியலுக்கு எம்மால்தான் முற்றுபுள்ளி வைக்க முடியும் என்பது மக்களுக்குத் தெரியும்.

மலையக தலைவர்களுக்குச் சுகபோக வாழ்க்கை, மக்களுக்கு துன்பகரமான வாழ்க்கை. இந்நிலைமை மாறக் கூடாதா? மக்கள் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய மக்களுக்கான அரசியலை நாம் ஏற்படுத்த வேண்டும்.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகிவிட்டன. எனவே, அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என தற்போது பேசி பயன் இல்லை. இந்நாட்டுப் பொருளாதாரத்துக்கு அவர்களே பங்களிப்பு வழங்குகின்றனர். அவர்கள் இலங்கை பிரஜைகள். இந்தியத் தமிழர்கள் அல்லர், இலங்கைத் தமிழர்கள் என்பதே சரி.

பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அங்குலமேனும் காணி உரிமை இல்லை, வீட்டு உரிமை இல்லை. இப்பிரச்சினையை தீர்க்கக் கூடாதா? எமது ஆட்சியில் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். காணி உரிமை வழங்கப்படும். பெருந்தோட்ட பகுதியில் கல்விமூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம். எனவே, பெருந்தோட்டப்பகுதியில் கல்வி கட்டமைப்பு மேம்படுத்தப்படும். மலையக சமூகத்தில் கல்வியால் மேம்பட்டவர்கள் உள்ளனர். பிள்ளைகளுக்குக் கல்வி வழங்குவது பெற்றோருக்கு இன்று சுமையாக மாறியுள்ளது. அந்த சுமையை நாம் குறைப்போம். கல்வியைப் பொறுப்பேற்போம். மந்த போசனைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். சிறந்த சுகாதாரத்துறை பெருந்தோட்ட பகுதிகளில் கட்டியெழுப்பட்டும்.

உங்கள் மொழியில் பொலிஸில் முறையிடக்கூடிய உரிமை இருக்க வேண்டும். அரச திணைக்களங்களில் தமிழ் மொழியில் சேவைகளைப் பெறக்கூடிய நிலை இருக்க வேண்டும். எமது ஆட்சியில் அந்த நிலைமை நிச்சயம் இருக்கும். இந்நிலைமை ஏற்படும்வரை, மொழிபெயர்ப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்” என்றார்.

# “கிழக்கில் தமிழர்கள் அழிந்து போகும் ஆபத்து”

2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 32 விகாரைகள் அமைக்கப்பட்டு மிகப் பெரிய பௌத்த மயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் தேர்தல் புறக்கணிப்பு பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஞாயிற்றுக்கிழமை (15) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகவும் சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவராகவும் அனுராகுமார திசாநாயக்க வலிமையான ஒரு எதிரணியின் உடைய கட்சி தலைவராகவும் பாராளுமன்றத்திலிருந்து கொண்டிருக்கும் போது தான் இந்த பௌத்த மயமாக்கல் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல் மட்டக்களப்பு எல்லைப் பகுதியான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் 3 லட்சம் மாடுகள் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பேரினவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிப்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது இவை எல்லாம் நடைபெறுகிறது சஜித்தோ, அனுரவோ, ரணிலோ இதனைத் தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார்.

இன்று அம்பாறை மாவட்டம் முற்றாகப் பறிபோய் விட்டது அதேபோல் திருகோணமலை மாவட்டமும் கிட்டத்தட்ட மிகப் பெயரளவில் பறிபோய்விட்டது. மட்டக்களப்பு மாவட்டம் பறிபோகத் தொடங்கி விட்டது. இந்த நிலையில், கிழக்குடன் வடக்கு இணைந்தால் மாத்திரம் தான் கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் வடக்கிலுள்ள தமிழ் மக்களுடன் இணையும்போது தங்களுடைய இருப்பை உறுதி செய்யக் கூடியதாக இருக்கும் என்றார்.

இந்த இணைவு நடை பெறவில்லை என்றால் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழ் மக்கள் 15 ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாது அழிந்து போகக் கூடிய ஆபத்து இருக்கிறது.

ஆகவே, இவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டுமாக இருந்தால், இந்த இனவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு தமிழர் தேசம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்வு எட்டப்பட வேண்டும் என்றார்.

# தக்காளிச்சாறு நிறுவன...

மட்டக்களப்பு மாவட்டம், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ரவிகரனால் தொடுக்கப்பட்ட வழக்கில் தக்காளி சாறு கலவை நிறுவன உரிமையாளருக்கு ரூபாய் 36,000 தண்ட பணமும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத் தண்டனையை நீதவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (13) வழங்கியுள்ளது.

இதனை வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ரவிகரன் உறுதிப்படுத்தினார்.

# அனுர, சஜித் அணியில் இருவர் ரணிலுக்கு ஆதரவு

தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் அனுஷ விமலவீர, தேசிய மக்கள் சக்தியின் குண்டசாலை தொகுதி அமைப்பாளர் சிசிர குமார செம்புவத்த மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முஸ்லிம் விவகார செயலாளர் ஒ.கே. நவாஸ் ஆகியோரே இவ்வாறு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அவர்கள், ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து கண்டியில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற “ரணிலால் இயலும்” வெற்றிப் பேரணியில் இணைந்து கொண்டனர்.

# நல்லடக்கமா? எரிப்பா? நாமே எதிர்த்தோம்

இந்த விவகாரத்தின் போது, தேசியத் தலைவர்கள் என்று கூறிக் கொள்கின்ற ரணிலும் அனுரவும் அந்த மோசமான கொள்கைக்கு எதிராகக் குரல் எழுப்ப முடியுமாக இருந்த போதிலும் அவர்கள் அதற்காக முன் வரவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவின் அன்றைய பிழையான கொள்கைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியுமே வீதிக்கிறங்கி போராட்டங்களை முன்னெடுத்திருக்கின்றது என்றார்.

அக்கரைப்பற்று நகரில் சனிக்கிழமை (14) நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அன்றைய சந்தர்ப்பத்தில் கோட்டாபய ராஜபக்ஷ செய்த இந்த விடயங்களை சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அனுமதித்தார்கள். இந்த நாட்டில் வாழ்கின்ற அனைவரும் இன மத பேதங்களை மறந்து இனவாதத்தை, மதவாதத்தை துறந்து அனைவரும் ஒற்றுமையாகச் சகோதரர்களாக வாழும் வகையில் நாட்டை வலுப்படுத்தி ஐக்கிய படுத்துவோம். மக்களின் உரிமைகளைப் பாதுகாப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு 5,000 ரூபாவுக்கு 50 கிலோ கிராம் உர மூடை ஒன்றை வழங்கி குறைந்த தொகையில் குறைந்த செலவில் விவசாயத்தை முன்னெடுத்துச் செல்ல வழியமைப்போம். இதற்கு மேலதிகமாக மீனவர்களுக்கு எரிபொருள் நிவாரணத்தையும் வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

மேலும், வறுமை அதிகரித்துக் காணப்படுகின்றமையால் நாட்டு மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். எனவே வறுமையை ஒழிப்பதற்காக புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அதனூடாக வரிய குடும்பம் ஒன்றுக்கு 24 மாதங்களுக்கு மாதம் ஒன்று தலா 20,000 ரூபாய் வீதம் ஐந்து பிரிவுகளுக்குள் உள்ளடக்கி வறுமையை போக்குவதற்கான செயற்பாட்டை முன்னெடுப்போம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

தாம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அனைத்து பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக மாற்றுவோம். மற்றும் சர்வதேச தரத்திலான இளைஞர் மத்திய நிலையங்களை உருவாக்கி அதன் ஊடாக இளம் தலைமுறையினருக்குத் தகவல் தொழில்நுட்பம், ஆங்கில மொழிக் கல்வி மற்றும் நவீனத் தொழில்நுட்ப அறிவு என்பவற்றைப் பெற்றுக்கொண்டு சிறந்த தேர்ச்சியையும் ஆளுமையையும் விருத்தி செய்து கொள்வதற்கான சூழலை ஏற்படுத்துவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# “மாற்றங்களுக்காக பலிக்கடாக்களாக்காதீர்”

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, களுத்துறை மாவட்டத்தின் பேருவளை, தர்கா நகர், அடுமுகமை மற்றும் பாணந்துறை ஆகிய பிரதேசங்களில் வெள்ளிக்கிழமை (13) இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

“கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறினோம். சிலர் எங்களை நம்பாது அவருக்கு வாக்களித்தனர். பிரதேச சபையில் உறுப்பினராகக் கூட இருக்காத அவரால், திறமையாக ஆட்சி செய்ய முடியாமல் போனது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால் மக்கள் போராட்டம் வெடித்தது. ஆட்சியைப் பாரமெடுக்குமாறு சஜித் பிரேமதாசவுக்கு அவர் அழைப்பு விடுத்தார். ஆனாலும், கோட்டாபயவின் தலைமையில், பிரதமர் பதவியை பாரமேற்க முடியாதென சஜித் மறுத்துவிட்டார். அவரின் அணியிலிருந்த பங்காளிக் கட்சிகளையும் கலந்தாலோசித்துத்தான், சஜித் இந்த முடிவை எடுத்தார்.

ரணில் விக்ரமசிங்க யாரையாவது கலந்தாலோசிப்பதற்கு அவரிடம் எம்.பிக்களோ அல்லது பங்காளிக் கட்சிகளோ இருக்கவில்லை. தனியாக இருந்த அவர், தனியாகச் சென்று ஆட்சியைப் பாரமெடுத்தார். இந்தியா வழங்கிய 04 பில்லியன் டொலர் நிதியைக்கொண்டு வரிசையை முடித்து வைத்தார். ஆனாலும், வீசா மோசடி மற்றும் புற்றுநோய் மருந்து மோசடி உள்ளிட்ட மிகப்பெரிய மோசடிகளை ரணிலால் தடுக்க முடியவில்லை.

நாட்டின் சுதந்திரத்துக்குப் பின்னர் நடந்த பாரிய மோசடிதான் வீசா விவகாரம். ஐம்பதாயிரம் கோடி ரூபாவை அமைச்சர்கள் சுருட்டிக்கொள்வதற்கு உதவியவர் ரணில். இவரால் நாட்டின் பொருளாதாரத்தை மீட்கவே முடியாது.

மற்றொருபுறமாகத் தேசிய மக்கள் சக்தி, மக்களின் ஆணைகளைக் கோருகிறது. ஊழலை ஒழிக்கப் போகிறார்களாம். கள்வர்களைக் கைது செய்யப் போகிறார்களாம். எம்.பிக்களின் ஓய்வூதியமான 18,000 ரூபாவை நிறுத்தப் போகிறார்களாம். நாங்கள் கேட்கிறோம். நிறைவேற்றதிகார ஜனாதிபதியால்தான், கள்வர்களைப் பிடிக்க முடியுமா? பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் நாட்டில் ஏன் உள்ளன? கெஹெலிய ரம்புக்வெல்லவின் ஊழலை யார் பிடித்தது? மக்களே பிடித்தனர். வீசா மோசடியைப் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், சுமந்திரன் மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரே நீதிமன்றத்தில் வழக்காடி நிறுத்தினர்.

தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழுவிலுள்ள 28 பேரில், ஒரு முஸ்லிமோ அல்லது தமிழரோ இல்லை. இதுதான், இவர்களின் மனநிலை. மாற்றம் ஒன்றுக்காக மக்களைப் பலிகடாக்களாக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தியில் சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் உள்ளன. ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரட்ன, ரவூப் ஹக்கீம் மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உள்ளிட்ட பலர் எம்முடனே உள்ளனர். நம்பிக்கையோடு சஜித் பிரேமதாசவுக்கு வாக்களியுங்கள்” என்று கூறினார்.

# 37ஆவது நினைவு தினம்

நிதர்ஷன் வினோத்

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவு தினம், யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் ஞாயிற்றுக்கிழமை(15) அனுஷ்டிக்கப்பட்டது.













# “ரணிலின் வெற்றி உறுதி”

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றிபெறுவது உறுதியாகியுள்ளது. எனவே, தமிழ் பேசும் மக்களும் இந்த வெற்றியின் பங்காளிகளாக வேண்டும். அப்போதுதான் உரிமைகளையும், அபிவிருத்திகளையும் இலகுவாக வென்றெடுக்க முடியும் என்றுஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

வாக்குரிமையே மக்களின் ஜனநாயக ஆயுதம். அந்த ஆயுதத்தை நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், நமது முன்னேற்றத்துக்காகவும் பயன்படுத்துவோம் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

இரத்தினபுரி பகுதியில் நடைபெற்ற பிரசார கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே சுப்பையா ஆனந்தகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், “ஜனாதிபதி தேர்தலுக்கான நாள் நெருங்கிவிட்டது. இன்னும் 6 நாட்களுக்குப் பிறகு வாக்குரிமையை மக்கள் பயன்படுத்தப்போகின்றனர். இம்முறை வாக்காளர்கள் அனைவரும் தமது வாக்கைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் இது நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகின்ற தேர்தலாகும்.

அதுவும் அனுபவமற்ற, முதிர்ச்சியற்ற அரசியல்வாதிகளுக்கு வாக்களிப்பதைத் தவிர்த்துக்கொள்வதே நல்லது. அப்படியானால் அனுபவமுள்ள, முதிர்ச்சியுள்ள, நாட்டை மீட்டெடுத்த தலைவரே உங்கள் தேர்வாக



இருக்க வேண்டும். அந்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க என்பதை நான் கூறிதான் உங்களுக்குத் தெரியவேண்டும் என்றில்லை. வரிசை யுகத்தில் நின்று வலி சுமந்த நாட்களை நாம் மறந்துவிடக்கூடாது. இன்று இயல்புநிலை உள்ளதெனில் அதற்கு ஜனாதிபதியே காரணம். எதிரணி வேட்பாளர்கள் சுதந்திரமாக அரசியல் செய்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்கிக்கொடுத்தவரும் அவரே.

நெருக்கடியான சூழ்நிலையிலும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, ‘உறுமய திட்டம்’, ‘அஸ்வெசும’ மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் பல பல விடயங்களை அவர் செய்துள்ளார். சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பும் அதிகரித்துள்ளது.

எனவே, தற்போதுள்ள இந்த சூழ்நிலையை மாற்றியமைத்தால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் படுகுழிக்குள் விழும். வரிசை யுகம் ஏற்படும் என்பதை மறந்துவிட வேண்டும். எனவே, உங்கள் வாக்கைச் சரிவரப் பயன்படுத்துங்கள்” என்றார்.

# டின்சின் த.வி. அதிபரின் உயிருக்கு அச்சுறுத்தல்

பொகவந்தலாவை-டின்சின் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் பொன்.பிரபாகரனுக்கு பல தரப்பினராலும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில். பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள அதிபர், ஹட்டன் கோட்டக்கல்வி காரியாலயம், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார்.

அதிபர் பிரபாகரன், மாணவிகளை கண்டிக்கும் போது, கடுஞ்சொற்களையும், மிக கேவலமான வார்த்தைகளையும் பிரயோகித்துள்ளார் என்றும் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

அந்த பிரதேசத்தில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் குழுவினருடன் மாணவிகள் சிலரைத் தொடர்புப் படுத்தி அதிபர் பேசியுள்ளார். மாணவிகளும் அவர்களின் பெற்றோர்களும் ஹட்டன் கல்வி வலய பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து, பாடசாலைக்கு விஜயம் செய்த பணிப்பாளரிடம் மாணவிகள் சிலர், இந்த அதிபர் தங்களுக்கு வேண்டாம் என்றும் கல்வி பயில்வதற்கான சுமுகமான சூழலை ஏற்படுத்தித் தருமாறு கூறி கடிதங்களைக் கையளித்துள்ளனர்.

அவற்றை வாங்கி படித்த பணிப்பாளர் இது தேர்தல் காலம் என்பதால், தேர்தல் முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் அதிபருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் குரல் பதிவுகள் பகிரப்பட்டுள்ளன.



இவ்வாறான நிலையில், பாடசாலையைப் பொறுப்பேற்றுக்கொண்டு. வேறு ஒரு பாடசாலையில் கையொப்பம் இடுவதற்கான சந்தர்ப்பத்தை தனக்கு ஏற்படுத்தித் தருமாறு, கல்வி பணிப்பாளரிடம் அதிபர் ஏற்கெனவே கோரியுள்ளதாகவும் அறியமுடிகிறது.

குறித்த அதிபர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக்கொண்டு கடந்த வாரம் ஆராய்ச்சி மாநாடு நடத்தியுள்ளார். இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இருந்து வருகை தந்திருந்தவர்களும் அதனைப் பாராட்டியுள்ளனர் .

ஆராய்ச்சி மாநாட்டிற்குக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்காத மாணவ, மாணவிகள் சிலரை மிக மோசமான முறையில் திட்டி தீர்த்ததை அடுத்தே, இவ்வாறான பதிவுகள் இடப்பட்டு அதிபருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை(15) பிற்பகல் 3 மணிக்குப் பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராகக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டம், சுமார் 10 வருடங்களுக்கு மேலாகச் செயல்படாமல் இருந்த பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

# ‘பைசா’வுக்கு இறுதி சடங்கு

பு.கஜிந்தன்

மனிதர்களுக்கு இறுதிச் சடங்கினை செய்வது போல வளர்ப்பு நாய்க்கும் இறுதி சடங்கினை செய்துள்ள சம்பவம் ஒன்று யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, மாவடி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(15) இடம்பெற்றுள்ளது.

‘பைசா’ என்று அழைக்கப்படும் ‘ரொட்வீலர்’ இன நாயானது, கடந்த 20.08.2006 அன்று பிறந்துள்ளது. தனது 18 வயதை தாண்டிய பைசா சனிக்கிழமை (14) அன்று உயிரிழந்துள்ளது.

கடந்த 10 வருடங்களாக தனக்கு பாதுகாப்பினை வழங்கிய நன்றிக் கடனுக்காக மனிதர்களுக்கு செய்கின்ற இறுதிச் சடங்கு போல பைசாவுக்கும் இறுதிச் சடங்கினை நடத்தி பைசாவினை வளர்த்து வந்தவர் நெகிழ வைத்துள்ளார்.

பேன்ட் வாத்தியங்கள் முழங்க, பைசாவின் உடலம் வட்டுக்கோட்டை பகுதி எங்கும் இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அதன்பின்னர் பைசாவின் உடலமானது நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.



# ஜோதிர்லிங்க கண்காட்சி ஆரம்பம்

வி.ரி.சகாதேவராஜா

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை கிராமத்தில் அமைந்துள்ள தான்தோன்றீஸ்வரம் ஆலயத்திற்கு முன்பாக உள்ள சிவ அரண்மனையில் 12 ஜோதிர் லிங்க தரிசனம் ஞாயிற்றுக்கிழமை (15) ஆரம்பமாகியுள்ளது.

விசேட தரிசனமானது குறித்த ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு,பத்தாம் வட்டாரம் கொக்கட்டிச்சோலை தெற்கில் அமையப்பெற்றுள்ள ஜோதிர்லிங்க கலைக்கூடத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி வரை பக்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் விசேடமாக, தண்ணீர்ப்பந்தல் 12 ஜோதிர்லிங்க தரிசனம் ஆன்மீக



படவிளக்கக் கண்காட்சி ஆகியவை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அற்றைத்திங்கள்

தமிழின் மூத்த படைப்பாளிகளும், தகைசான்ற ஆளுமைகளும், தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டு தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (17) மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், மூத்த உரைபெயர்ப்பாளர் சபாபதி சிவகுருநாதன் உரை நிகழ்த்தவுள்ளார் என பொதுச்செயலாளர் கலாநிதி ஜெ.தற்பரன் அறிவித்துள்ளார்.

மர்மமான முறையில்

# நபர் ஒருவரின் சடலம் மீட்பு

மொஹொமட் ஆஸிக்

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஹாகொட ஜயந்தி வீதியில் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த நபரொருவரின் சடலம் ஞாயிற்றுக்கிழமை (15) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அதே பகுதியை சேர்ந்த 57 வயதுடைய உபாலி செனவிரத்ன என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இன்று காலை சடலத்தைக் கண்ட பிரதேசவாசிகளால் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், இதன்போது சடலத்தின் பல இடங்களில் காயங்கள் காணப்பட்டமை தெரியவந்துள்ளது.

வாகனம் மோதியதில் இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகப்படும் பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கைத்துப்பாக்கியை காண்பித்து கொள்ளை

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மஹாவெவ பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்று கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை(15) அதிகாலை இடம்பெற்றதாக தொடுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர், எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளரிடம் கைத்துப்பாக்கியைக் காண்பித்து சுமார் 207,500 ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் தொடுவாவ பொலிஸில் பதிவு செய்த முறைப்பாட்டிற்கமைய, எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி. ரி.வி. கெமராக்களை பரிசோதனை செய்து, சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தொடுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

# தேர்தல் கண்காணிப்பாளர் மட்டக்களப்புக்கு விஜயம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகச் சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழு ஆலோசகரும், தென்கிழக்காசிய நாடுகளுக்கான சுதந்திர தேர்தல் ஆலோசகருமான பிரித்தானியாவைச் சேர்ந்த ஜகே பர்க்கர், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சனிக்கிழமை (14) மாலை விஜயத்தை மேற்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடிய அவர், காத்தான்குடி ‘கபே’ தேர்தல் கண்காணிப்பு அலுவலகத்திற்கு விஜயம் செய்து அங்கு கபே அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் .

கபே தேர்தல் கண்காணிப்பு ஆலோசகர் கலாநிதி எம்.தயாபரன் மற்றும் கபே மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் தேச மானிய ஏ.எல்.மீரா சாஹிபு உட்பட தேர்தல்



கண்காணிப்பு அதிகாரிகள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது, வன்முறையற்ற தேர்தல், அமைதியான முறையில் வாக்களிப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன், வாக்குரிமை இல்லாத பாடசாலை மாணவர்களைத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பாக பாடசாலை மாணவர்களால் விநியோகிக்கப்பட்ட வேட்பாளர்களின் பிரசுரங்களும் சர்வதேச கண்காணிப்பு ஆலோசகருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் குரலைப் பறிப்பது ஜனநாயக விரோதமானது

மக்களின் குரலைப் பறிக்கும் எந்தவொரு முயற்சியும் ஜனநாயக விரோதமானது. இவ்வாறு மக்களின் குரலைப் பறிப்பது சட்டத்தை மீறும் செயலாகும். அதிகார மோகத்தால் கண்மூடித்தனமான மற்றும் அரசியல் விடத்தால் மிகவும் சீரழிக்கப்பட்ட பின்னணியில் கூட, இந்த நாட்டின் தேர்தல் பாரம்பரியத்தின் மீது மக்கள் மத்தியில் மரியாதையும் நம்பிக்கையும் இன்னும் இருப்பதாக நாங்கள் உணர்கிறோம்.

ஜனநாயக விழுமியங்கள் மற்றும் மக்களின் இறையாண்மைக்கு இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களின் நேர்மறையான பதில்கள் குறித்தும் அரசியல் தலைவர்கள் அறிந்திருக்கிறார்கள். செப்டெம்பர் 15ஆம் திகதியன்று சர்வதேச ஜனநாயக தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒரு நாடாக நாம் இருக்கும் ஆபத்தான சூழ்நிலை மற்றும் அதற்கு வழிவகுத்த கடுமையான பொருளாதார நெருக்கடி குறித்து பெரும்பான்மையான மக்கள் போதுமான புரிதல் கொண்டுள்ளனர். இலங்கை ஜனநாயகத்தை மதிக்கும் மற்றும் மனித நெறிமுறைகளைப் பாதுகாக்கும் மற்றும் சர்வதேச சமூகத்துடன் புரிந்துணர்வுடன் செயல்படும் நாகரீகமான நாடாக இருக்க வேண்டும் . சமூக மற்றும் அரசியல் மதிப்புகளுக்கு மேல் பறக்கும் நாடாக இருக்கக்கூடாது.

நாடொன்றில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின், மக்களுக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும். எதிர்வரும் 21ஆம் திகதியன்று ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெறவிருக்கின்றது. எனினும், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில், அரசாங்கத்துக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் செயற்பட்ட விதம் தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஜனநாயக பாராளுமன்ற பாரம்பரியத்தை பின்பற்றும் நாட்டில், அந்த ஜனநாயகத்தின் பலமான அம்சமான தேர்தல் (உள்ளூராட்சி மன்ற) நடத்துவது கேள்விக்குறியாக இருந்தது.

மக்களின் குரலைப் பறிப்பது ஜனநாயக விரோதமானது. உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைத்து மக்களின் குரலை நசுக்க அரசாங்கம் முயன்றது. இந்நாட்டின் அரசியல் வரலாற்றை உற்று நோக்கும் அறிவொளி பெற்ற குடிமகனுக்கு அந்த வரலாற்றின் மீது தாக்கப்பட்ட தனித்துவ அரசியல் யுகங்களைச் சரியாகப் புரிந்துகொள்வது கடினம் அல்ல. 1975இல் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க நாட்டின் தேர்தலை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைத்தார். 1977இல் ஆட்சிக்கு வந்த ஜெயவர்தன காலத்தில் அதன் ஒழுக்கக்கேடான நடவடிக்கைகள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டன.

சிறிமா அரசாங்கத்திற்குச் சவால் விடுத்து, ஜயவர்தன தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை (மேற்கு கொழும்பு) இராஜினாமா செய்து, இடைத்தேர்தலில் போட்டியிடுவது ஜனநாயகத்திற்கான துணிச்சலான செயல் என்று அழைக்கப்பட்டது. ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு அவர் செய்த செயல்பாடுகளைப் பார்த்து ஜனநாயகத் தலைவர் தந்திரமான பாதுகாவலர் என்று மக்கள் முடிவு செய்தனர்.

நாடொன்றில் ஜனநாயகம் நிலைநிறுத்த வேண்டுமாயின், மக்கள் தங்களிடமிருக்கும் ஒரேயொரு ஆயுதமான வாக்கைப் பயன்படுத்தவேண்டும். அதற்கு ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். ஏதாவது சூழ்ச்சிகளை மேற்கொண்டு, தேர்தல்களை ஒத்திவைக்க முயலுமாயின், அதற்கெதிராக குரல்கொடுத்து, மக்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுப்பது எதிர்க்கட்சிகளின் பொறுப்பாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# எதிர்வுகூறல்களின் முடிவு

**லக்ஸ்மன்**

இலங்கையில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் முடிவுகள் எவ்வாறு அமையும் என பரவலாகப் பேசப்படுகின்றது. இம்முறை எவரும் எதிர்பார்க்காத வகையில், 50 சதவீத வாக்குகளை எந்த ஒரு வேட்பாளரும் பெறப்போவதில்லை என கணிசமாகப் பேசப்படுகின்றது. ஆயினும், ஒரு சில தரப்பிலிருந்து அனுரகுமார, அந்த 50 சதவீத வாக்கைப் பெற்றுத் தெளிவான வெற்றியைப் பெறுவார் என எதிர்வு கூறப்படுகிறது. இது எந்தளவுக்குச் சாத்தியம் என்பது உறுதிப்படாதிருக்கிறது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மூவருமே 50 சதவீதம் பெற மாட்டார்கள் என்பது சஜித் அணியினருக்கும் அனுரகுமார அணியினருக்கும் ரணில் அணியினருக்கும் புரியும். எனவேதான், அவர்கள் வட, கிழக்கு நோக்கி தங்கள் கரிசனையைச் செலுத்தினார்கள். ஆயினும், தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து இவர்களில் பகிரங்கமாக சஜீத்தைத் தவிர வேற எவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆயினும், நாமல் ராஜபக்ஷ எந்தவித அதிகார பரவலாக்கலுக்கும், குறிப்பாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குதல் சாத்தியமற்றது என்று என்று தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

இத்தகைய சூழ்நிலையில், இலங்கை முழுவதும் சிங்கள தேசியக் கட்சிகளின் சார்பில் சஜித், அனுர, ரணில் என மும்முனைப் போட்டிகள் நடக்கின்ற பொழுது, வடக்கு, கிழக்கை அங்கத்துவப்படுத்தி தமிழ் அணியினர் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி இருக்கின்றனர். இந்த சூழல், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளையும் உரிமைகளையும் சர்வதேசத்திற்குத் தெளிவுபடுத்துவதற்கான ஒரு குறியீடாக இது காட்டப்படுகின்றது. உண்மையில் சிக்கல்கள் நிறைந்த சூழ்நிலையில், தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தியிருப்பது என்பது பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய பொருளாதார சூழலில் மக்களுடைய மனநிலை, வரி சுமைகள் இவற்றுக்கு மேலாக உரிமையா? சலுகையா? என்ற கோஷத்தில் தமிழ் தரப்பு உரிமை என்ற விடயத்தைப் பேசி இருக்கின்றது.

தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் இந்தக் கோட்பாட்டில் அவ்வளவாக அக்கறை செலுத்தவில்லை. மேலும், ஒரு ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள தமிழ் வேட்பாளர் பொருத்தமான ஒருவராக அமையவில்லை என்பது தமிழ் தரப்பில் உள்ள மிகப்பெரிய பலவீனமாகும். இரண்டாவது விடயம், தமிழ் தரப்பு தங்கள் பிரச்சினைகளை அரசியல்வாதிகளிடம் பேசுவதைத் தவிர்த்து, இந்தத் தேர்தல் சந்தர்ப்பத்திலாவது சிங்கள மக்களுக்கு சிங்கள பிரதேசங்களுக்குச் சென்று தெளிவுபடுத்தக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. ஏனெனில், ஜனாதிபதி என்று சொல்பவர், இலங்கை தீவு முழுவதற்கும் சென்று தங்கள் கருத்தைத் தெரிவிக்க உரிமை உண்டு. இதனைச் சிங்களத் தரப்பு செய்திருக்கின்றது. தமிழ் தரப்பு அதைச் செய்யவில்லை. சிங்கள மக்களுக்குத் தமிழர்களுடைய பிரச்சினையைத் தெளிவுபடுத்தக்கூடிய சூழல் இச்சந்தர்ப்பத்தில் கிடைத்த பொழுதும், சிங்களப் பகுதிகளில் எந்த ஒரு பிரசார தெளிவுபடுத்தல் கூட்டத்தினையும், ஒன்றுகூடல்களையோ கூட தமிழ் தரப்பு செய்யவில்லை.

> **தமிழர் தரப்பு பிரச்சினையை அறிவதற்கான வாய்ப்பை தமிழர் தரப்பு செய்து கொடுக்கவில்லை**

> **ஏற்படப்போகும் மாற்றம் கொடுக்கப்போகின்ற வலியைத் தாங்குவதற்கு நாம் தயாராகித்தானாக வேண்டும்**

எனவே, தமிழர்களுடைய பிரச்சினை தொடர்பாகச் சிங்கள அரசியல்வாதிகள் முன்வைக்கின்ற கருத்துக்களையே அறிந்து கொண்ட சிங்கள மக்கள், உண்மையில் தமிழர் தரப்பு பிரச்சினையை அறிவதற்கான வாய்ப்பை தமிழர் தரப்பு செய்து கொடுக்கவில்லை. இது ஒரு வரலாற்றுத் தவறு. இதே போன்று, முஸ்லிம் பகுதிகளிலும் தமிழ் தரப்பு செய்திருக்க வேண்டும். வெறுமனே வாக்குக்காக அல்லாமல் கருத்தியல் தெளிவுக்காக இதைச் செய்ய வேண்டிய கடப்பாடு தமிழ் வேட்பாளர் அணிக்கு இருந்தது. அதை அவர்கள் செய்யாது தவறவிட்டிருக்கிறார்கள்.

சிங்கள தரப்பினர் தமிழ் பிரதேசங்களுக்கு வந்து பேசுகின்றது பிரசாரக் கூட்டங்களை நடத்துகின்றனர் என்ற இனவாத கருத்தியலையே வெளிப்படுத்தியிருந்தனர்.

தவிர சிங்கள மக்கள் இலங்கையை முழு நாடாகக் கருதி, இந்த நாட்டுக்குரிய ஜனாதிபதித் தேர்தலை மதிக்கின்ற பொழுது, தமிழ் மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ்த் தேசியத்தின் குறியீடாகத் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவர்கள் உரிமைக்காகப் பேசுதல் என்பதில் சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் தங்கள் பிரச்சினையைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருந்தது.

இந்த வகையில், தமிழ்த் தேசியத் தரப்பு தங்களுடைய எதிர்கால திட்டம் தொடர்பாக சிங்கள மக்களுக்குச் சொன்ன செய்தி என்ன? முஸ்லிம் மக்களுக்குச் சொன்ன செய்தி என்ன? என்பவற்றுக்கு அப்பால் தமிழ்த் தேசியத்தின் குறியீடாக ஒரு வேட்பாளர் நிறுத்தப்பட்டிருப்பது மாத்திரம் நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் குறி காட்டியாக அமைகின்ற விடயம் சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்துகின்ற விடயமாக அமையுமா என்பதே கேள்வி,

கடந்த காலங்களில் இரண்டு ஜனாதிபதித் தேர்தலில் குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ, சரத் பொன்சேகா போன்றவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்கும்படி தமிழ் அரசியல் கட்சிகள் கூறி, அதன்படி, வட,கிழக்கில் பெரும்பான்மையான தமது வாக்குகளை சரத் பொன்சேகா அவர்களுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வழங்கியிருந்தார். இவர்களாலேயே தான் தமிழ் மக்கள் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டார்கள். அவ்வாறான நேரத்தில், இவர்களை ஆதரித்த தமிழ் கட்சிகள் இன்று அவர்களால் எந்த பயனும் இல்லை. இந்த சிங்கள தேசியவாதத்தால் எந்த உரிமையும் வழங்கப்படப் போவதில்லை என்று சொல்லி தமிழ் வேட்பாளருக்குத் தமிழ் மக்கள் ஆதரவளிக்காத நிலை உருவானால், இதன் மறுதலை சிங்கள மக்களோடு தமிழ் மக்கள் சேர்ந்து வாழத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்பதை வெளிப்படுத்துவதாக முடிவுகள் அமையும்.

ஏனெனில், ஒடுக்கு முறையைச் செய்த கடந்த இரண்டு தலைவர்களையும் ஆதரித்தவர்கள் தங்களுடைய பிரச்சினைக்காகக் குரல் கொடுக்கின்ற தமிழ் தலைவர் ஒருவரை ஆதரிக்காமல் இருப்பதன் மூலம் நிரூபணம் ஆகும்.

இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இதன் காரணமாக அதிகரித்த சுமை, பொருளாதார நலிவு, ஏற்றுமதி இன்மை, உற்பத்தியின்மை இவ்வாறான பல்வேறு காரணங்களால் மக்களின் இயல்பு வாழ்க்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், மீட்க எந்த ஒரு கட்சியின் தலைவர்களும் முன்வரவில்லை. நாடு நடுத்தெருவிலிருந்தது.

அப்பொழுது தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வந்த ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டை பொறுப்பேற்றார். அவருடைய திறன்கள் காரணமாக இந்த நாட்டை மீட்டெடுத்தார். உற்பத்தியும் ஏற்றுமதியும் இல்லாத சூழ்நிலையில், வரிகளை அதிகரித்து ஐ.எம்.எவ். இடம் கடனைப் பெற்று இந்த பொருளாதார சுமையிலிருந்து கடன் காலத்தை பின் தள்ளி, இந்த நாட்டை மீட்டெடுத்திருக்கின்றார். மீட்டெடுத்த சூழலில், வரிச் சுமையைத் தாங்க முடியாமல் குறிப்பாக அரச உத்தியோகத்தர்களும் தனியார்த் துறையினரும் பாமர மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த ஒரு நிலையில், இரண்டாவது கட்ட உதவியில் நாடு ஒரு மாற்றத்தைக் கண்டு வந்த சூழலில் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது.

இப்பொழுது பொறுப்புகளை ஏற்கத் தயங்கிய தலைவர்களெல்லாம் தேர்தல் குறித்து ரணிலுக்கு எதிரான விமர்சனங்களைச் சொல்கின்றனர். அதேபோல, திருடர் கூட்டத்துக்குப் பின்னால் ரணில் இருக்கின்றார் என்று நிராகரிக்கப் போகின்ற மக்களும் மாற்றம் ஒன்று தேவை என்று விரும்பி அனுரவை ஆதரிக்கின்றவர்களும் சஜித்தை ஆதரிக்கின்றவர்களும் இருக்கின்றனர். உண்மையில் மாற்றம் ஒன்று காண இதுதான் பொருத்தமான காலம் என்றாலும், ஏற்படப்போகும் மாற்றம் கொடுக்கப்போகின்ற வலியைத் தாங்குவதற்கு நாம் தயாராகித்தானாக வேண்டும்.

ஏனெனில், நாட்டில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் சீர்குலைக்கப்பட்டால், அதற்கு முனைந்தால், ஏற்கெனவே அபாயத்திலிருந்து மீள முயற்சித்துக் கொண்டிருக்கையில், மிக மோசமான அபாய கட்டத்துக்குச் செல்லும். அந்த நிதர்சனம் தெரிய வேண்டும். இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் கிழித்து எறிய முடியாதவை. எனவே, மாற்றம் ஒன்றைக் கேட்டு மாற்றத்தை ஏற்படுத்தி மாற்றம் ஒன்றைச் செய்ய முடியாத சூழலில், நாடு மீண்டும் ஒரு நெருக்கிச் சந்திக்கும் என்பதே நிதர்சனம்.

இன்றைய தேர்தல் சூழ்நிலை பங்குச்சந்தையில் தளம்பலை இப்போதை ஆரம்பித்து விட்டது. இலங்கையின் அரசியல் தளம்பல் காரணமாகவே இந்தநிலை. பாராளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட்டால், அதன் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் உட்பட இரண்டு தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அதற்கு நிதியீட்டம் தேவை. அவ்வாறான நிலை மீண்டும் கோட்டா யுகத்துக்கு கொண்டுசெல்லும். இதற்கு எதிர்வு கூறல்களை விடவும் தீர்மானகரமான மக்களின் தீர்ப்பே தேவையானது.



## வாழ்வியல் தரிசனம்

தனிமனித ஒழுக்கம் அற்றவன், நேர்மைக்குப் புறம்பானவன் ஆவான். ஆனால், இவர்களே நடிப்புடன் கூடிய வாழ்வில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் நேர்மை மிகு அரசியல்வாதிகள், தங்கள் நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்தனர். அவர்கள் மூலம் கிடைத்த அனுகூலத்தை, நேர்மையற்றவர்கள் ஆட்சிக்கு வந்தமையால், நாட்டில் பிரச்சினைகள் வானை முட்டிவிட்டன.

வியாபாரத்தில் மோசடி, கல்வியை வியாபாரமாக்குதல், மருத்துவத்தில் சுரண்டல், போதையை நாடுதல், நாகரிகத்தின் பேரால் நடக்கும் சீர்கேடுகள், எல்லாமே ஒழுக்கம் சார்ந்தனவற்றுக்கு எதிரான இழிச் செயல்களில் சில உதாரணங்கள் ஆகும்.

ஆனால், இந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள், தங்களை ஒழுக்கம் மிகு மாந்தர்களாகவே காட்டுவதும் உண்டு. இவர்களின் வருமானங்களைப் பார்த்து, சாதாரணமான மக்களும் மனப்புரள்வில் சிக்குவதுண்டு. நிலையான நல்வாழ்வில் தோல்வியில்லை; அமைதி மட்டுமே உண்டு என்பதை உணர்க.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இடம் ஆக்கிரமிப்பால் வெள்ளம்

அதிகமாக மழை பெய்யும் காலங்களில் புத்தளம் மாவட்டமானது வெள்ளத்தில் மூழ்கி விடுகின்றது. இதற்குக் காரணம் இம்மாவட்டத்தில் உள்ள குளங்கள், ஆறுகள் மற்றும் பள்ளங்கள் நிறைந்த இடங்களை இட ஆக்கிரமிப்பினால் மணலால் நிரப்பி வீடுகள் அமைத்து இடத்தினை சுவீகரித்துக் கொண்ட காரணத்தினால் நீரானது வழிந்தோடுவதற்கு எவ்வித இடமுமின்றி தேங்கி வெள்ளமாகின்றது.

அதேபோல மழைக்காலங்களில் கால்வாய்கள் நிறைந்து காணப்படுவதனால், அந்தக் கால்வாயிலிருந்து கழிவு நீரானது நேரடியாகத் தாழ்மையான பிரதேசங்களுக்கு வழிந்து ஓடுவதனால் அப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கும் சிரமமாக உள்ளது. மேலும், மழை நீரும் இவ்வாறான கால்வாய்களிலிருந்த நீரும் நிரம்புவதனால் வெள்ளம் ஏற்படுவதற்குப் பிரதான காரணமாகின்றது. எப்போதெல்லாம் மழை பெய்கின்றதோ அப்போதெல்லாம் புத்தளம் மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படுவதும் சாதாரணமாகி விட்டது.மேலும், கால்வாய்கள் ஒழுங்காக வெட்டப்படாமலும் அவற்றிலுள்ள குப்பைகளை அகற்ற முடியாமல் இருப்பதும் அங்குப் பிரதான பிரச்சினையாகின்றது. எனவே இட சுவீகரிப்பு காரணத்தினால் மழைக் காலங்களில் வெள்ளமானது வலிந்து ஓடுவதற்கு வழியின்றி வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இக்காலங்களில் தாழ்மையான பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட மக்கள் வேறு பாடசாலை மற்றும் கோயில்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

எனவே இப்பிரச்சனையை அனைவருக்கும் தெரியப்படுத்துமாறு உங்கள் பத்திரிக்கையில் கோரிக்கையை விடுகின்றேன்.

– சொக்கலிங்கம் லோகினி

### விவசாய நிபுணர்களின் அமர்வை

# ஷமுன்னெடுக்கிறது பவர்

விவசாயத்தில் நைதரசன் பாவனையினால் ஏற்படும் சூழல் மற்றும் பொருளாதார பாதிப்புகள் தொடர்பில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் கண்டறியப்பட்ட விடயங்களின் பிரகாரம், நிலைபேறான வகையில் நைதரசன் முகாமைத்துவத்துக்கான அவசர தேவை என்பது இலங்கைக்கு மிகவும் இன்றியமையாததாகும். சுப்பர் யூரியா தொடர்பான தொழில்நுட்ப அமர்வை, இலங்கையின் விவசாயத்துறையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள பவர் என அறியப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு கோல் ஃபேஸ் ஹோட்டலில் செப்டெம்பர் 4ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட இந்த அமர்வின் போது, துறையின் இரு நிபுணர்களான பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பயிர் விஞ்ஞான பிரிவின் பேராசிரியர். எஸ். பி.நிஸ்ஸங்க மற்றும் Innovar Ag, LLC இன் உப தலைவரும் Kansas அரச பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறையின் முன்னாள் உதவி பேராசிரியருமான ரே அசேபெடோ ஆகியோர் கலந்து கொண்டு அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தனர்.

பவர் பிரதம நிறைவேற்று அதிகாரி/ முகாமைத்துவ பணிப்பாளர் ரொல்ப் பிளாசர், விவசாய செயற்பாடுகளுக்கான பிரதி முகாமைத்துவ பணிப்பாளர்/பணிப்பாளர் ஜனக குணசேகர மற்றும் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தை சேர்ந்தவர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதில் FAO ஸ்ரீலங்காவின் சிரேஷ்ட விவசாய நிபுணர் கலாநிதி டபிள்யு.எம்.டபிள்யு. வீரகோன் அவர்களும் அடங்கியிருந்தார். இவர், விவசாய முன்னாள் பணிப்பாளர் நாயகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வளிமண்டலத்தில் நைதரசன் மிகையாக காணப்படுவதுடன், தாவர வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றது. ஆனாலும், தவறாக நிர்வகிக்கப்பட்டால், அதனால் பெரும் சூழல்சார் சவால் நிலை ஏற்படும். இலங்கையில், விவசாயத்திலிருந்து நைதரசன் கசிவுகள் அதிகரித்துள்ளன. இதனால் மண் வளம் குன்றுதல், நீர் மாசடைதல் மற்றும் பச்சை இல்ல வாயு வெளியேற்றங்கள் போன்றவற்றில் பங்களிப்பு செலுத்தப்படுகின்றது. நைதரசன் உரங்களிலிருந்து 40 சதவீதத்துக்கும் குறைந்த பகுதி தாவரங்களால் வினைத்திறனான வகையில் பயன்படுத்தப்பட்ட போதிலும், எஞ்சிய பகுதி சூழலில் வெளியிடப்பட்டு, பரந்தளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

2016ஆம் ஆண்டில் சுப்பர் யூரியா பயன்பாடு தொடர்பில் பவர் முன்னிலையிலிருந்து செயலாற்ற ஆரம்பித்திருந்தது. அமோனியா ஆவியாதல் மற்றும் மண்ணில் நைதரசன் உரங்கள் நைட்ரேற்றம் அடைவதை குறைக்கும் நைதரசன் இரட்டை உறுதியாக்கல் தன்மையை கொண்டதாக இது அமைந்திருந்தது. இந்த உறுதியாக்கல் கூறினால், நைதரசன் உர பிரயோகத்தின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதுடன், நைதரசன் இழப்புகள் குறைக்கப்பட்டு, விளைச்சல் அளவை மேம்படுத்தி, சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைத்திருந்தது. இதன் பங்காளர்களில் இலங்கையில் பவர் பிரத்தியேக விநியோக உரிமையாண்மையை கொண்ட Innovar Ag அடங்கியுள்ளது.

Innovar Ag இன் தயாரிப்புகளான N-Yield மற்றும் NBound ஆகியன நைதரசன் இழப்புகளை பெருமளவில் குறைப்பதுடன், சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைத்து, பயிர் விளைச்சலை 22 சதவீதத்தினால் அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது. PENXCEL போன்ற தமக்குரிய தொழில்நுட்பங்களினூடாக, Innovar Ag இனால் விவசாயிகளுக்கு தமது உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ளக்கூடிய சாதனங்கள் வழங்கப்படுவதுடன், புவியின் சுகாதாரத்தை பேணுவதற்கும் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

அமோனியா ஆவியாதல் மற்றும் நைதரசன் கசிவு போன்ற பொறிமுறைகளினூடாக நைதரசன் இழப்புக்கு எதிரான செயற்பாடுகளில் Innovar Ag கவனம் செலுத்துகின்றமை தொடர்பில் அசேபெடோ குறிப்பிட்டதுடன், தாவரங்களை பெருமளவு நைதரசன் சென்றடைவு, பாதிப்பை ஏற்படுத்தும் கசிவுகளை தணித்தல் மற்றும் நீர் களங்கமடைதலை குறைத்தல் போன்றவற்றை உறுதி செய்யும் நவீன தீர்வுகளை உறுதி செய்வதாக அமைந்துள்ளது. இரட்டை செயற்பாட்டுத்திறன் மிக்க நைதரசன் உறுதியாக்கியான NEON எனும் தயாரிப்பு அடங்கலாக, அதன் பலதரப்பட்ட தெரிவுகளினூடாக, இலாபத்தை அதிகரிக்கச் செய்யும் நிலைபேறான விவசாய செயன்முறைகளை உருவாக்குவது மாத்திரமன்றி, ஆரோக்கியமான சூழலுக்கும் பங்களிப்பு வழங்குவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



### உயிரியல் பரம்பல் மீளமைப்பு முயற்சிகளை

# Star Garments Group உறுதி செய்கின்றது




இலங்கை வருடாந்தம் 8,000 ஹெக்டெயர்கள் வீதம் வனாந்தர அழிப்புக்கு முகங்கொடுத்த வண்ணமுள்ளது. உலகின் மழைக் காடுகளில் 2030ஆம் ஆண்டளவில் 10 சதவீதம் மாத்திரமே எஞ்சியிருக்கும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். Star Garments Group (Star) தனது நிலைபேறாண்மை மூலோபாயத்தின் அங்கமாக, தனது தொழிற்சாலை மற்றும் அலுவலக வளாகங்களில் உயிரியல் பரம்பலை மீள நிறுவுவதில் கவனம் செலுத்தியுள்ளது.

2023 உலக கடல்புல் தினத்துடன் உயிரியல் பரம்பல் மறுசீரமைப்பு பணிகளுக்கான தனது அர்ப்பணிப்பை Star ஆரம்பித்திருந்தது. 3 ஹெக்டெயர்களில் கண்டல்தாவரங்களை மீளுருவாக்கவும் உறுதியளித்திருந்தது. சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களுக்கிடையிலான பகுதியில் அமைந்துள்ள ஆனவிழுந்தாவ ரம்சார் ஈரநில காப்பக பகுதியில் இந்த பணிகளை மேற்கொள்ள முன்வந்திருந்தது.

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், வனாந்தர பாதுகாப்பு திணைக்களம், இலங்கை கடற்படை, வனஜீவராசிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (WNPS) மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து உயிரியல் பரம்பல் மீளநிறுவும் பயணத்தை Star முன்னெடுத்திருந்தது. ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான கொள்கைகளைப் பின்பற்றி இயற்கையான முறையில் கண்டல்தாவரங்கள் மீளுருவாவதை துரிதப்படுத்துவதில் கவனம் செலுத்தியிருந்தது. இந்தத் திட்டத்துக்கு, 2024ஆம் ஆண்டில் இலங்கைக்கான UN Decade of World Restoration Flagship விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில், மீன்-எலும்பு வடிவிலான நீர் பிரவேசிக்கக்கூடிய வழிகள் இலங்கை கடற்படையினால் வழங்கப்பட்ட தேசப்படத்தின் உதவியுடன் தயார்ப்படுத்தப்பட்டு, இந்த கைவிடப்பட்ட காணியினுள் நீரை கொண்டு வர முடிந்திருந்தது. திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை Star அணியினர் 500 கண்டல்தாவர கன்றுகளை நாட்டி ஆரம்பித்திருந்தனர்.

தற்போது இலங்கையின் கண்டல்தாவர பரம்பல் 15,000 - 19,000 ஹெக்டெயர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது நாட்டின் மொத்த நிலப்பரப்பின் 0.3 சதவீதமாகும். இதனூடாக, நாட்டின் கண்டல்தாவர பரம்பல் மிகவும் குறைவான நிலையில் காணப்படுவதுடன், காலநிலை மாற்றங்கள், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றினால் பாதிக்கப்படக்கூடிய நிலையை கொண்டுள்ளது. நாட்டின் வனாந்தரத்தின் உள்ளக பகுதியாக கண்டல் தாவரங்கள் அமைந்திருப்பதுடன், இலங்கையின் மொத்த வனாந்தரப் பரம்பலின் 2 சதவீதமாக உள்ளது. மேலும், வேகமாக அழிவடைந்து வரும் வனாந்தரப் பகுதிகளின் 17 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

'blue forests' என அறியப்படும் கரையோர மற்றும் கடல் சூழல்கட்டமைப்புகளில் கண்டல் தாவர வனாந்தரங்கள், கடல் புற்கள் மற்றும் அலை உப்பு சதுப்புப் பகுதிகள் போன்றன அடங்கியுள்ளதுடன், இவை இயற்கையில் காணப்படும் வினைத்திறனான காபன் பிரித்தெடுப்பு அங்கங்களாகும். வெப்ப வலய மழைக்காடுகளுடன் ஒப்பிடுகையில் பத்து மடங்கு அதிகமாக காபனீரொட்சைட் அலகை தேக்கி வைத்திருக்கும் ஆற்றலை கொண்டுள்ளதால், புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்துக்கு எதிரான உறுதியான கவசங்களாக அமைந்துள்ளன.

இந்த இயற்கை சூழல்கட்டமைப்புகளினால், அனர்த்தங்கள் ஏற்படுவதிலிருந்து நாட்டின் கரையோர பாதுகாப்புக்கு முக்கிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

கண்டல்தாவர சூழல்கட்டமைப்புகளினால், பல பின்தங்கிய சமூகங்களில் நிலைபேறான வாழ்வாதாரங்கள் வழங்கப்படுகின்றன.



# புரிந்து கொள்ள வாய்ப்பு



கணேஸ்குமார் மதியந்தி
ஊடககறகைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்



இன்றைய தொழில்நுட்ப உலகில் சினிமா என்ற அத்தியாயம் பார்வையாளர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்து நிலையில், அடுப்பெரிக்கும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்று கேட்ட ஆணாதிக்க சிந்தனைக்கு பெட்ரோல் ஊற்றிப் பற்ற வைத்து அநேக வருஷமாச்சு என்று சந்தோஷப்பட்டால், அந்த சந்தோஷத்தில் இரண்டு மணி நேர அபாயத்தை அள்ளி வைத்திருக்கிறது இலை! சராசரிக்கும் கீழான கிராமத்தில், அதைவிடச் சராசரியான குடும்பச் சூழலில் இருக்கும் பெண் ஒருத்தி தன் லட்சியக் கனவான படிப்பைத் தொடர்வதற்காக எதிர்கொள்ளும் இடைஞ்சல்களும், அதை அவள் சமாளிப்பதும்தான் இந்த 'இலை' திரைப்படம். அதென்ன இலை? வேறொன்றுமில்லை... ஹீரோயினுக்கு படத்தில் சூட்டப்பட்டிருக்கும் பெயர்தான் அது. முதலில் பச்சை பசேலென்ற அந்த கிராமத்திற்கும், அந்த பசேல் குளிர்ச்சியை நம் மனசுக்குள் இடப்பெயர்ச்சி செய்த ஒளிப்பதிவாளர் சந்தோஷ் அஞ்சலுக்கும் மானசீகமாக ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டு இந்த விமர்சனத்தை ஆரம்பிப்பதே சாலப் பொருத்தம்!

தன் மகள் இலை நன்றாக படித்து, நல்ல வேலைக்குப் போக வேண்டும் என்கிற இலட்சியத்தை சுமந்து கொண்டிருக்கும் ஏழை விவசாயி தகப்பன் பல கிலோ மீட்டர்கள் தாண்டிப் போய் அவளை படிக்க வைக்கிறார். அதே ஊரிலிருக்கும் பண்ணையார் வீட்டுப் பெண்ணும் அதே பாடசாலையில் படிக்கிறாள். எல்லா பரீட்சையிலும் முதல் புள்ளி வாங்கும் இலை மீது பண்ணையார் மகளுக்கு பொறாமை. இது ஒருபுறமிருக்க, இலையின் அம்மாவுக்கும் தாய் மாமனுக்கும் அவள் படிக்கவே கூடாது என்பதில் கொள்ளை வெறி. இந்த இக்கட்டான சூழலில்தான் 10ஆம் வகுப்பு பரிட்சை வருகிறது. இலை அந்த பரிட்சையை எழுதக் கூடாது என்று சதி செய்யும் பண்ணையார், அவளது அப்பாவை ஆட்கள் வைத்து தாக்குகிறார். குற்றுயுரும் குலையுயிருமாக மருத்துவமனையில் அவரிருக்க மகளுக்கோ பரிட்சை. குடும்பமே மருத்துவமனைக்கு ஓட, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கைக்குழந்தையான தங்கையை எங்கு ஒப்படைத்துவிட்டு பரிட்சைக்கு போவது? என அல்லாடும் இலையின் அடுக்கடுக்கான அவஸ்தைகளையும் எதிர்கொள்ளும் சவால்களையும் எடுத்து காட்டுவதுதான் படம். எப்படியோ பரிட்சை அரைக்குள் அவள் உள்நுழைகின்ற அந்த நிமிஷத்தில் தியேட்டரில் எழும் கைதட்டலை பார்த்து, அதுவரை பொறுமை காத்திருந்த ரசிகர்களுக்கு ஆளுக்கொரு பாரத ரத்னாவே கொடுக்கலாம்.

படத்தின் கருத்து வலிமையாக இருந்தாலும், கதை ஒரே இடத்தில் நின்று கொண்டு நகர முடியாமல் அடம் பிடிப்பதைகாணமுடிகிறது. அதிகளவான செயற்கையான காட்சிகளால் படத்தை நிரப்ப முயல்கிறார் இயக்குநர் பினிஷ்ராஜ். ஆனாலும், முழு கதையையும் தன் தலையில் சுமக்கும் இந்த இலை கதாப்பாத்திரத்தை ஏற்றுக் கொண்ட நடிகை சுவாதி நாராயணனின் தவிப்பையும் அழகையும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். இவரைத் தவிர படத்தில் நடித்திருக்கும் எல்லாருமே, இந்த லோ பட்ஜெட் படத்திற்கு இது போதும் என்கிற மாதிரியே நடித்திருக்கிறார்கள். ஆனால், எல்லாவற்றையும் சமநிலை செய்து ரசிகர்களை ஒருநிலைப்படுத்துகிறது படத்தின் மையக் கருத்து. விஷ்ணு திவாகரனின் இசை, மனசுக்கு இதமாக இருக்கிறது. அந்த டைட்டில் பாடல் நல்ல மெலடி!

இலை, கொஞ்சம் மௌனக்கொண்டிருந்தால், தலைவாழை இலையாகவே அமைந்திருக்கும்! பிற நட்சத்திரங்களாக இலையின் விவசாயி அப்பா மாரிமுத்தாக டாக்டர் சிங் மோகன் மிரட்டலாக நடித்திருப்பதோடு நாயகியின் தாய் ராமாயியாக வரும் மலையாள நடிகை ஸ்ரீதேவி மல்லிகா அக்காவாகத் தீபு கனக லதா சோனியா அப்துல் ஹக்கீம் காவியா நாயகியின் தம்பி அன்புவாக வரும் அஸ்வின் சிவா, குட்டி தங்கை பேபி ஜூனியா என படத்தில் வரும் அனைத்து கதாபாத்திரங்களும் சரியாகத் தேர்வு.

உலகத்தில் இருள் எல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஒரு சின்ன தீக்குச்சியின் வெளிச்சத்தை மறைக்க முடியாது உள்ளிட்ட வேலுமணியின் நச் டச் வசனங்களுக்காக அவரை பாராட்டலாம். சந்தோஷ் அஞ்சலியின் ஒளிப்பதிவு பசுமையாக பக்காவாக இருந்தது. இப்படத்தின் பலவீனம் என குறிப்பிடுகையில் கதாநாயகி சுவாதியைப் பரீட்சைக்குப் பள்ளிக்கூடம் போகும் காட்சியில் ரொம்ப நேரம் ஓட வைத்திருப்பது என்றாலும் பலம் எனக் குறிப்பிடுகையில் இலை எனும் பட டைட்டிலோடு நாயகி சுவாதி நாராயணனின் நடிப்பைக் குறிப்பிடலாம். ஒரு காலத்தில் கிராமங்களில் கல்வி கற்பதற்கு வசதி இல்லாமல் இருக்கும் குழந்தைகள் கல்விக்காக எப்படி எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்பதனை இப்படத்தில் இயக்குநர் வித்தியாசமாகக் கூற முயன்றிக்கின்றார். அதை இன்னமும் விறுவிறுப்பாகவும் கூறு இருந்தால் இன்றைய காலகட்டங்களிலும் கிராமங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த படம் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கும் என எண்ணலாம். மலைக்குப் போனாலும் மதக்கடி போனாலும் மச்சானோடு துணை வேணும் உள்ளிட்ட வசனங்கள் அன்றைய காலகட்டங்களில் காணப்பட்ட பால்நிலை ரீதியான நியமங்களை எடுத்துரைப்பதாகக் காணப்படுகின்றது

சினிமா என்பது பல கோடி முதலீட்டில் கவர்ச்சியுடன் படம் எடுத்து பாலாய் போய்க்கொண்டிருக்கும் தமிழ் சினிமாவில் இது போன்ற சமூக நடப்புகளை ஆழமாக வெளிச்சம் இட்டுக்காட்ட வந்துள்ள இலையின் போக்கில் ஆங்காங்கே கொஞ்சம் சலிப்பு வந்தாலும் முன்னரே சொன்னது போல, பெண் கல்விக்கு ஏற்பட்ட இடையூறுகளைத் தெரிந்துகொள்ள ஒவ்வொருவரும் அவசியம் இப்படத்தைப் பார்க்க வேண்டும் முடிந்தால் தயாரிப்பு நிர்வாகம் பள்ளி மாணவர்களுக்கு சலுகை விலையில் இப்படத்தைப் போட்டுக் காட்டுவதன் மூலம் இன்னொரு சமூகத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் எனவும் கூறலாம்.



இஸ்லாமாபாத்

ஆப்கானிஸ்தானில் தாக்குதல்:

# 14 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் துப்பாக்கியுடன் வந்த மர்ம நபர்கள் சுட்டதில், 14 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

ஆப்கனின் மத்திய பகுதியில் ஏராளமான ஷியா முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இந்நிலையில், இயந்திர துப்பாக்கியுடன் கடந்த 13ஆம் திகதி வந்த மர்ம நபர்கள் சிலர், 'கர்' மற்றும் தய்கன்டி மாகாணங்களுக்கு இடையே பயணித்து கொண்டிருந்த ஷியா முஸ்லிம்களை நோக்கி சரமாரியாக சுட்டனர்.

இதில், 14 பேர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக ஈரான் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் நஷ்சர் கனானி கூறுகையில், "ஈராக் நாட்டில் உள்ள புனித தலத்துக்கு சென்று விட்டு ஆப்கன் திரும்பி கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஷியா முஸ்லிம்களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார்.

இது குறித்து, ஆப்கனை ஆளும் தலிபான் அரசின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், "இது மிகவும் கொடூரமான தாக்குதல். இதற்கு காரணமானவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்" என்றார்.

ஆப்கானிஸ்தான் தலிபான்கள் கட்டுப்பாட்டில் இருந்தாலும், ஐ.எஸ். அமைப்பினர் இங்கு அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். தலிபான்களின் பிரதான எதிரியாக ஆப்கனில் ஐ.எஸ். அமைப்பினர் உள்ளனர்.

புதுடெல்லி

# "2 நாட்களில் இராஜினாமா"

"அடுத்த 2 நாட்களில் புதுடெல்லி முதல்வர் பதவியில் இருந்து இராஜினாமா செய்கிறேன். நான் நேர்மையானவன் என்று மக்கள் தீர்ப்பளிக்கும் வரை முதல்வர் பதவியில் அமர மாட்டேன்" என்று முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் 6 மாதங்களாக திகார் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முதல்வர் கெஜ்ரிவால், இப்போது தான் பிணையில் விடுதலையாகியுள்ளார். கைது செய்யப்பட்டபோதும், சிறையில் இருந்தபோதும், பதவியை இராஜினாமா செய்ய மறுத்த அவர், இப்போது தனது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளார்.

புதுடெலியில் ஞாயிற்றுக்கிழமை (15) கட்சி தொண்டர்கள் மத்தியில், அவர் பேசுகையில், "கஷ்ட காலங்களில் எங்களுடன் இருந்த கடவுளுக்கு மிக்க நன்றி. பெரிய எதிரிகளுடன் போரிட்டுள்ளோம். நமது கட்சி தலைவர்கள் சத்யேந்திர ஜெயின், அமானதுல்லா கான் இன்னும் சிறையில் உள்ளார்கள். அவர்கள் விரைவில் சிறையில் இருந்து வெளியே வருவார்கள் என நம்புகிறேன். இன்னும் 2 நாட்களில் புதுடெல்லி முதல்வர் பதவியில் இருந்து விலக உள்ளேன். 2 நாட்களில் ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள் கூட்டம் நடத்தி புதிய முதல்வர் தெரிவு செய்யப்படுவார்.

தேர்தலை சந்திக்க தயாராக உள்ளேன். நான் நேர்மையானவன் என மக்கள் தீர்ப்பளிப்பார்கள். தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற பிறகு தான், முதல்வர் நாற்காலியில் அமர்வேன்" என்று அவர் பேசினார்.



கர்நாடகா

பாலியல் புகாரால்

## பட்டியலின குடும்பங்கள் வெளியேற்றம்

கர்நாடாகாவில் பட்டியலின சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த உயர்சாதி இளைஞரை காப்பாற்ற 50 பட்டியலின குடும்பங்களை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளனர்.

கர்நாடகாவில் உள்ள யாத்கிர் மாவட்டத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில், உயர்சாதியைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவர், பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமியை திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் அந்தச் சிறுமி 5 மாத கர்ப்பமான நிலையில், கடந்த ஆகஸ்ட் 12ஆம் திகதி சிறுமியின் பெற்றோர் அந்த இளைஞர் மீது பொலிஸில் புகார் அளித்துள்ளனர்.

இதன்படி, குறித்த இளைஞர் மீது, பொலிஸார் போக்ஸோ வழக்கு பதிந்துள்ள நிலையில், அந்தப் புகாரை வாபஸ் வாங்குமாறு குறித்த சிறுமியின் குடும்பத்துக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது.

ஆனால், சிறுமியின் குடும்பம் விடாப்பிடியாக மறுத்த நிலையில், புகாரை வாபஸ் வாங்கும்வரை அந்த கிராமத்தில் வசிக்கும் 50 பட்டியலின குடும்பத்தினரை ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளனர். அவர்கள் கடைகளில் பொருட்கள் வாங்கவும், ஆலயங்களில் வழிபாடு செய்யவும், பொது இடங்களைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.


இந்த விவகாரம் பேசுபொருளான நிலையில், பட்டியலின அமைப்பினர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். அதேநேரத்தில், இதுதொடர்பாக இருதரப்பிலும் பொலிஸார் மற்றும் வருவாய்த் துறையினர் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.



வொஷிங்டன்

மூக்கில் அடைத்திருந்த

## பிளாஸ்டிக்



அமெரிக்க இளைஞர் ஒருவர், 6 வயது சிறுவனாக இருந்தபோது, மூக்கில் சிக்கிய பிளாஸ்டிக் துண்டு, 26 ஆண்டுக்கு பிறகு தானாக வெளியேறியுள்ள நிலையில், இப்போது தான் சுதந்திரமாக சுவாசிப்பதாக அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் அரிசோனாவைச் சேர்ந்தவர் ஆன்டி நார்டன். 32 வயதான இவருக்கு, ஆறு வயதாக இருக்கும் போது பிளாஸ்டிக் வளையம் ஒன்று மூக்கில் சிக்கிக் கொண்டுள்ளது.

அவரது தாயார் கடும் முயற்சி செய்து, அதனை அகற்றினார். இருப்பினும் ஒரு சிறு பகுதி மட்டும் உள்ளேயே சிக்கி இருந்துள்ளது. அது அவருக்கும், அவரது தாயாருக்கும் தெரியவில்லை. அப்போது முதல் ஆன்டி நார்டன் சுவாசிப்பதில் சில பிரச்சினைகளை சந்தித்து வந்துள்ளார்.

இதற்காக மருத்துவர்களை சந்தித்த போது, மூக்கு வழியாக வேகமாக காற்றை வெளியேற்றும்படி அவர்கள் கூறியுள்ளனர். அடிக்கடி செய்யவும் அறிவுறுத்தி வந்தனர்.

இதன்படி, ஆன்டி நார்டனும் செய்து வந்த நிலையில், சமீபத்தில் அந்த பிளாஸ்டிக் துண்டு வெளியே வந்தது. இதை பார்த்த அவருக்கு அதிர்ச்சியும், ஆச்சர்யமும் ஏற்பட்டது.

இது குறித்து தன் சமூக வலைதளத்தில் வீடியோ வெளியிட்டுள்ள அவர், "26 ஆண்டுக்கு பின் இப்போதுதான் என்னால் நிம்மதியாக சுவாசிக்க முடிகிறது. வாசனையை நுகர முடிகிறது" என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து பிரிமியர் லீக்:

# தோற்றது லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை(14) நடைபெற்ற நொட்டிங்ஹாம் பொரெஸ்டுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் தோற்றது.

பொரெஸ்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கலும் ஹட்சன்-ஒடோய் பெற்றிருந்தார்.

இதேவேளை, அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது. எவெர்ற்றன் சார்பாக டிவைட் மக்னெய்ல், டொமினிக் கல்வேர்ட்-லூயின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வில்லா சார்பாக ஒலி வட்கின்ஸ் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, ஜோன் டுரான் ஒரு கோலைப் பெற்றார்.



நாகேந்திரன் ஞாபகார்த்த சம்பியன் கிண்ணத் தொடர்:

# கல்முனை பெஸ்ட் லெவிண் வெற்றிவாகை சூடியது

அஸ்ஹர் இப்றாஹிம்

துறைநீலாவணை சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்திய நாகேந்திர்ன் ஞாபகார்த்த சம்பியன் கிண்ணத் தொடரில் கல்முனை பெஸ்ட் லெவிண் அணி வெற்றிவாகை சூடியது.

64 அணிகளை உள்ளடக்கிய அணிக்கு எட்டுப் பேர் கொண்ட 5 ஓவர்கள் மின்னொளியிலான இத்தொடரின், இறுதிப் போட்டியானது துறைநீலாவணை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது, அக்கரைப்பற்று ஜொலி போய்ஸ் விளையாட்டு கழகத்தை வென்றே பெஸ்ட் லெவிண் வெற்றிவாகை சூடியது.

பெஸ்ட் லெவிணுக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. இறுதிப் போட்டியின் நாயகனாக பெஸ்ட் லெவிணின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் றஸாவும், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், அதிகூடிய ஆறு ஓட்டங்களைப் பெற்ற வீரராகவும் சகலதுறை வீரர் அப்லால் காரியப்பர் தெரிவாகினர்.






இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் ஜுவென்டஸ் எம்போலி தொடர்

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், எம்போலியின் மைதானத்தில் சனிக்கிழமை (14) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.



செந்தமிழ் பிறீமியர் லீக் கிண்ணத் தொடர்:

# ஈஸ்டர்ன் யுனைட்டட் சம்பியனானது

எஸ்.தில்லைநாதன்

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்திய செந்தமிழ் கால்பந்தாட்ட பிறீமியர் லீக் தொடரில் ஈஸ்டர்ன் யுனைட்டெட் அணி சம்பியனானது.

வடமராட்சி கிழக்கு கழகங்களை உள்ளடக்கி நடாத்தப்பட்ட இத்தொடரின் இறுதிப் போட்டியானது செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை (12) நடைபெற்றபோது செந்தளிர் கால்பந்தாட்டக் கழகத்தை எதிர்கொண்ட ஈஸ்டர்ன் யுனைட்டெட் பெனால்டியில் வென்றே சம்பியனானது.

போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளுக்கும் தலா இவ்விரண்டு கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்தன.



# தேசியத்தில் சாதிக்கும் சிலாபம் மாணவர்

எம்.யூ.எம்.சனூன்

சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியில் பாடசாலைக்கான சிறந்ததொரு விளையாட்டு மைதானம் இல்லாமையினாலும் கூட இப்பாடசாலை மாணவர் அண்மைக்காலமாக விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை நிலை நாட்டி வருகின்றனர்.

அண்மையில் குருநாகல் வெலகெதர விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட போட்டிகளில் நஸ்ரியா கல்லூரி மாணவன் எம்.என்.எம்.நாஸிஹ், 20 வயதுக்குட்பட்ட தடகள போட்டியில் நான்காமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார். இந்த மாணவன் நஸ்ரியா மத்திய கல்லூரி வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மட்ட தடகள போட்டியில் பங்குபற்ற இருப்பது சிறப்பம்சமாகும்.

அஞ்சலோட்டம் உட்பட பாடசாலை கிரிக்கெட் அணியில் தனது திறமையை பாரிய அளவில் நாஸிஹ் வெளிப்படுத்தி வருகிறார்.

இந்த மாணவரை போன்றே, பல மாணவர் பாடசாலையில் விளையாட்டு மைதானம் இன்றியே தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

பாடசாலை சமூகத்தின் சிறந்த வழிகாட்டல்களும், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் இவர்களை போன்ற மாணவர்களுக்கு உறுதுணையாக இருப்பது வரவேற்கத்தக்கது

சாதிக்கத் துடிக்கும் இவரை போன்ற பல மாணவர்கள் பயிற்சியுடனும், மனவலிமையுடனும் முன்னேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 16, செப்டெம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.